**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**
Mcop 318 of 2021
எ.ம.சா1 சுசிலன் ஜான்

| | | |
|---|---|---|
| Name | : | சுசிலன் ஜான் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 21.01.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1.2ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட இருசக்கர வாகனமான டி.என்.76.ஒய்.6417 க்குரிய காப்பீடு நகல் எ.ம.சா.ஆ 1

2. 22.1.2025ம் தேதிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீது எ.ம.சா.ஆ 2

3. 1ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெறாமல் திரும்ப வந்த அறிவிப்பு எ.ம.சா.ஆ 3

4. 2ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் எ.ம.சா.ஆ 4

5. 1ம் எதிர்மனுதாரருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்பதற்காக இணை வழி மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மற்றும் அபராதம் கட்டியதற்கான அபராத ரசீது எ.ம.சா.ஆ 5.

**5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

1ம்எதிர்மனுதாரர் மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. டிஏன்.76.ஒய்.6417 என்ற வாகனத்திற்கு எங்களது காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் என்பதால் எங்களது நிறுவனம் மட்டுமே இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றால் காப்பீடு விதிகளை மீறியுள்ளதால் நாங்கள்

வழங்க வேண்டிய அவசியமில்லை. 5ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தை ஒட்டிசென்ற நபருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். இந்த விதிமீறலை தவிர்த்து வேறு எந்தவிதமான காப்பீடு விதிமீறல்கள் இல்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ 5ன்படி அபராதத்தை உரிமையாளர் தான் செலுத்தியுள்ளார். ஒட்டுனர் செலுத்தவில்லை. அபராதத்தை செலுத்திய உரிமையாளர் ஒட்டுனரை கேட்டு செலுத்தினாரா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது சம்பந்தமான ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் சரிதான். மனுதாருக்கு இழப்பீடு கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யான விபரங்களை கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.